**தலைப்பு – 271 – திருகோணமலை மாவட்டச் செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

திருகோணமலை மாவட்டச் செயலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஏப்ரல் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக ஏற்படும் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திருகோணமலை மாவட்டச் செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திருகோணமலை மாவட்டச் செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள்,

செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்டச் செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என அறிவிக்க முடியாதிருந்தது.

(ஆ) திருகோணமலை மாவட்டச் செயலகத்தினால் முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **வருடாந்த நிதிக்கூற்று** | | |
| 2018 நவம்பர் 21 ஆம் திகதியுடையதும் 267/2018 ஆம் இலக்கமுடையதுமான அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின்படி வருடாந்த நிதி அறிக்கை 2019 பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்பு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் அது 1 மாத தாமதத்தின் பின் 2019 ஏப்ரல் 1ஆம் திகதி கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இதனகத்துப்பின் பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் சுட்டிக்காட்டுகின்றேன். |

**1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| புகையிரத பயணச் சீட்டுகளுக்கான செலவு 271-1-0-1003ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும். மாவட்ட செயலகத்தினால் புகையிரத அனுமதிச் சீட்டுக்கள் தொடர்பான ரூ. 76,420 க்கான செலவு விடயத்தில் பற்று வைத்தமையால் நிதிச் செயற்றிறன் கூற்றில் வேறு பொருட்கள் சேவை மீதான பணச் செலவு ரூ. 76,420 ஆல் குறைத்துக் காட்டப்பட்டள்ளது. | புகையிரத பயணச் சீட்டுகளுக்கான செலவு விடயம் 1003ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும். | இலங்கை புகையிரத் திணைக்களத்தின் பொது முகாமையாளரினால் 2018.01.08ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, சுற்றறிக்கை இலக்கம் GMR/CAR(RII)01.01/2016 இன் படி புகையிரத பயணச்சீட்டுகளுக்கான செலவுகள் தொடர்பில் பயன்படுத்தப்படும் 1003 ஆம் விடயம் என்ற செலவுத்தலைப்பு, 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து செயற்படுத்தப்படும் வகையில் 1401 செலவுத்தலைப்பின் கீழ் அமைந்ததால் மாறியுள்ளது. |

**1.6.3 நிதி நிலைமைக் கூற்று**

இது தெடர்பில் கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அ). நிதிக்கூற்றுக்களை அறிக்கையிடும் நோக்கில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை இணங்கண்டு அளவீடுகளை கிரயத்தில் மதிப்படுவதாகவும், கிரய அட்டவணைக்கு உட்படாத சந்தர்ப்பங்களில் மீழ் மதிப்பீட்டு செய்யப்பட்ட பெறுமதி பயன்படுத்தப்பட்டதாகவும், குறிப்பிடப்பட்டிருந்ததடன் கிரயத்துக்கு உட்படுத்தப்பட்ட சொத்துக்கள் மற்றும் மீழ் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் எவை எவை என நிதி நிலைமை கூற்றில் குறிப்பிடப்படவில்லை. | சொத்துக்கள், ஆலைகள் மற்றும் உபகரணங்களை இனங்கண்டு கொண்டது எவ்வாறு எனவும் அளவீடுகளை மேற்றொண்ட அடிப்படைகளும் திட்டவட்டமாக குறிப்பிடப்படவேண்டும் | நிதிக்கூற்றுப் படிவத்தில் சொத்துக்கள், ஆலைகள் மற்றும் உபகரணங்களை இனங்கண்ட அடிப்படைகளைக் குறிப்பிடுவதற்கு அப் படிவத்தில் இடம் ஒதுக்கப்படவில்லை என்பதாலும் அவ்வாறான கணக்குகளை பதியும்போது, கிரயத்தில் மட்டுமன்றி மதிப்பீட்டுப் பெறுமதியிலும் சொத்துப் பெறுமதிகள் பதியப்பட்டள்ளன என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |
| ஆ. நிதியல்லாத சொத்துக்கள் சம்மந்தமான சுற்றறிக்கையின்படி 2018 ஜனவரி 01 ஆம் திகதியன்று, நிலையான சொத்துக்களின் | நிதி சிலமைக் கூற்றில் உள்ள மீதிகளுக்குச் சமமாக இருக்க வேண்டும். | 2018 ஜனவரி 01 ஆம் திகதியன்று நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூ. 1,601,358,977 (SA-6) பக்க |

| | | |
|---|---|---|
| பெறுமதி ரூ. 1,601,358,977 ஆக குறிப்பிடப்பட்டிருப்பினும், நிதி நிலைமைக் கூற்றிக்படி, 2017 டிசம்பர் 31 ஆம் திகதி நிதியல்லாத சொத்துக்களின் மீதி ரூ. 1,269,133,533 என ரூ. 332,225,444 வால் கூட்டிக் காட்டப்பட்டள்ளது. | | இலக்கம் 33 இல் சரியாக காட்டப்பட்டள்ளது எனவும், அது நிதி நிலைமைக் கூற்றில் நிதியல்லாத சொத்துக்களாக 2017 டிசம்பர் 31 ஆம் திகதியின் மீதியாக ரூ. 1,269,133,533 தவறுதலாக காட்டப்பட்டுள்ளது. |
| இ. திறைசேரி ஏடுகளின்படி 2018 டிசம்பர் 31 ஆம் திகதி நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூ. 820,091,564 ஆக இருந்ததெனினும் நிதி நிலமை பற்றிய கூற்றில் அது ரூ. 1,636,948,492 ஆக குறிப்பிடப்பட்டுள்ளதனால் ரூ. 818,856,928 வித்திாசம் காணப்பட்டது. | நிதியல்லாத சொத்துக்களின் மீதி அத்தினத்தின் திறைசேரி ஏடுகளுடக் சமப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டு முடிவின்போது இனையத்தளம் (Online) ஊடாக திறைசேரி கணக்கேடுகளுடனான மீதிகள் நிதி நிலைமைக் கூற்றுகளின் படியான பெறுமாணங்களுடன் ஒப்பிடப் பட்டபோது அவை சமமாக இருந்தன. அதேபோல் 2019 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதம் திறைசேரி ஏடுகளின் பெறுமானங்கள் அவ்வாறு வித்தியாசமான பெறுமானங்களைக் காட்டியது. இவற்றைச் சரி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |
| ஈ. நிதிக்கூற்றின் (ACA-6) இல் போருள் வெளியேற்றங்கள் ஏற்படவில்லை என குறிப்பிடப்பட்டிருந்த போதிஏற்படவில்லை என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் திறைசேரி ஏடுகளின் படி ரூ. 7,556,948 பெறுமதிவாய்ந்த சொத்துக்கள் வெளியேற்றப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படடிருப்பதால் மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் பற்றிய சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்களின் மூலம் உறுதிப்படுத்தப்படவில்லை. | கணிப்பீட்டாண்டில் மேற்கொள்ளப்பட்ட பொருள் வெளியேற்றங்கள் நிதிக் கூற்றுகளில் காட்டப்ப்பட வேண்டும். | பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் இந் நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டு முடிந்ததன் பின் பொருள் வெளியேற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட காரணத்தால் அவ்வாறு வெளியேற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதி, நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை என்பதுடன் இதன் பின் இவ்வாறான செயல்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தயவுடன் குறிப்பிடுகின்றேன். |

**1.6.4 அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணக் கொடுப்பனவுக் கணக்கின் ஒப்பீட்டுக் கூற்று.**

இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் கீழ் வருமாறு.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| அ. நிதி நிலைமை சம்மந்தமான கூற்றில் முற்பணக் கணக்குகளின் நிதிச் சொத்துக்கள் ரூ. 101,653,819 என காட்டப்பட்டிருந்த போதிலும் திறைசேரி பதிவுகளின் படி, அப்பெறுமதி ரூ. 101,736,359 ஆக காணப்பட்டதால் ரூ. 82,540 வித்தியாசம் காணப்பட்டது. | திறைசேரி ஏடுகளுடன் சமப்பட வேண்டும். | அதன் பெறுமதி ரூ. 101,653,819 உடன் சமப்படுவது எவ்வாறு எனில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணக் கணக்கின் சரியான மீதி ரூ. 100,000,903 மற்றும் வேறு முற்பணங்களான கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்துக்கு நெல் கொள்வனவு செய்வதற்கு பெற்றுக் கொடுத்த முற்பணம் ரூ. 1,652,917 என்பதுடன் தற்போது அவற்றை கணக்குப் புத்தகங்கங்களிலிருந்து நீக்குவதற்கு அரச கணக்குகள் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் திறைசேரி அச்சுப்பதிவுகளில் அவை காட்டப்பட மாட்டாது என தயவுடன் குறிப்பிடுகின்றேன். |
| ஆ. கணிப்பீட்டாண்டுக்கென தயாரிக்கப்பட்டிருந்த அரச உத்தியோகத்தர்களின் முற்பணக்கணக்கின் திட்டமிடப்பட்ட கூற்றுக்கு அமைய, 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட்டவிருந்த கடன் மீதிகளின் கூட்டுத் தொகை ரூ. 1,947,451 ஆக இருந்ததுடன் அதனுள் 5 வருடங்களையும் விஞ்சிய ரூ. 1,049,306 க்கான கடன் மீதியொன்றும் உள்ளடங்கி இருந்தது. | கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக்கணக்கு நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டவருவதை தயவுடன் குறிப்பிடுகின்றேன். |

**1.6.5 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் வழங்கப்பட வேண்டிய உத்தரவாதம்.**

2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய கணக்கீட்டு உத்தியோகத்தர் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக உத்தரவாதம் வழங்க வேண்டி இருந்ததுடன் அதன்படி செயற்படவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தின் நிதி நிர்வாகத்துக்கு வினைத்திரனுள்ள உள்ளக நிர்வாக செயற்குழுவொன்று உருவாக்கப்பட்டு செயற்படுத்தி வருவதாக பிரதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும், கணக்கீட்டு உத்தியோகத்தர் உத்தரவாதம் வழங்க வேண்டும் என்பதுடன், அச் செயற்குழுவின் வினைத்திரன் தொடரபில் காலத்துக்குக் காலம் மீழ் மதிப்பீடுகளைச் செய்து அதன்படி அக் குழு வினைத்திறன் கொண்டதாக செயற்படத் தேவையான மாற்றங்களை மேற்கொள்வதாகவும் அக் கணிப்பீடுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதிகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டி இருந்ததுடன் அவ்வாறான கணிப்பீடுகள் மேற்கொள்ளக்கடவில்லை. | 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 38ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய பணியாற்ற வேண்டும். | 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் படி இதனகத்துப் பின் அவ்வாறான கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படும். |

### 1.6.6 சட்ட திட்டங்களுக்கும் விதிமுறைகளுக்கும் எதிராக அமைந்தவை

மாதிரிக் கணக்காய்வு பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டதிட்டங்கள், விதிமுறைகளுக்கும் எதிரான சந்தர்ப்பங்கள் பின்வருமாறு விவரிக்கப்படடுள்ளது.

| அவதானிப்புகள் | | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| சட்டதிட்டங்கள் விதிமுறைகளுக்கு ஏற்ப செயற்படுதல் | பெறுமதி | அமைவாகச் செயற்படாமை | | |
| 1.இலங்கை சனநாயகக் குடியரசின் தாபன விதிக் கோவை<br>XIX அத்தியாயத்தின் 5.2.1 ஆம் பந்தி. | ரூ.<br>825,600 | வீட்டு வாடகை அறவிடப்படாமை | தாபன விதிக் கோவையின்படி செயற்பட வேண்டும் | வீட்டு வாடகைச் சபையால் வழங்கப்பட்ட பரிந்துரைப்படி சில வீடுகளுக்கான மதிப்பீட்டு வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| XIX அத்தியாயத்தின் 7.2 ஆம் பந்தி. | | அபராத வாடகை அறவிடப்படாமை | தாபன விதிக் கோவையின்படி செயற்பட வேண்டும் | மாவட்டத்தில் நிலவும் பதவி வெற்றிடங்கள் காரணமாக இடமாற்றம் பெற்றிருந்தும் மாவட்டத்தின் பணியாற்றும் உத்தியேனாகத்தர்களின் தங்குமிடவசதி பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவையும் அவர்களது சேவையையும் கருத்தில் கொண்டு 05 வருடங்களுக்கும் அதிகமான காலத்துக்கு நியாயமான அடிப்படையில் வாடகைக்கு கொடுக்க வாடகை சபை தீர்மானித்துள்ளது. |
| (11). இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதி. | | | | |
| நிதி ஒழுங்கு விதி 65(4)(X1) | 1,150,000 | மீழ் நிரப்பல் மதிப்பீட்டின்படி ஏற்பாடு செய்யப்பட்ட ஒதுக்கல்களை வேறு செலவு விடயத்துக்கு மாற்றி வைத்தல். | மீழ் நிறப்பல் மாற்றக் கூடாது | 2018 ஆம் ஆண்டின் மே மற்றும் ஜுன் மாதங்களில் 74 அரச முகாமைத்துவ உதவியாளர்கள் 41 கிராம சேவை உத்தியோகத்தர்கள் 12 அலுவலக உதவியாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் காரணமாக அவர்களின் தனிப்பட்ட சம்பளங்கள் கொடுப்பதற்கு ஒதுக்கல் பற்றாக்குறை ஏற்பட்டதால் இவ்வாறு மாற்றம் செய்யப்பட்டது. |
| (111). பொது நிர்வாக சுற்றறிக்கை. | | | | |
| 2016 டிசம்பர் 29 ஆம் திகதிய 30/2016 | - | மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் வாகனங்கில் பயன்படுத்தப்படும் எரிபொருள் பாவனை சம்மந்தமான பரிசோதனை செய்யப்பட வில்லை. | பொது நிர்வாக சுற்றறிக்கையின்படி பணியாற்ற வேண்டும் | எரிபொருள் பாவனை சம்பந்தமாக இப் பரிசோதனைகளை எதிர்காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

வருடாந்த வருமானங்களின் மதிப்பீடுகளை தயாரித்தல், ஒதுக்கல்களை மாற்றியமைத்தல், ஒதுக்கல்களை உபயோகப்படுத்துதல் மற்றும் மீதிகள் சம்பந்தமான கணக்காய்வுக் கணிப்பீடுகள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) தனது திணைக்களத் துக்குறிய மதிப்பீடுகளை இயலுமானவரை பூரணமாக சரியாக மேற்கொள்ளப்பட்டுள்ளதை உறுதிப்படுத்திக் கொள்வது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். எனினும், கணிப்பீட்டு ஆண்டில் 1401 மற்றும் 2401 ஆகிய செலவு விடயங்களான 2 விடயங்களுக்கு ரூ. 1147 500 நிகர மதிப்பீட்டிலிருந்து மீதியாக ரூ 896,136 ஆக இருந்ததுடன் அது நூற்றுக்கு 48 முதல் நூற்றுக்கு 60 வீதம் வரையான விலகலுடையதாக காணப்படுகிறது. | நிதி ஒழுங்குவிதிகளின் குறிப்பு 50 (II) இன் படி பணியாற்ற வேண்டும். | செலவுக் கட்டுப்பாடு மற்றும் தேவை ஏற்படாத காரணத்தால் இவ் ஒதுக்கல் மீதமாக உள்ளது. |
| (ஆ) பகுத்தறிவு ரீதியாக விகிதப் பகுப்பாய்வு செய்யத்தக்க எல்லா சேவைகளையும் மதிப்பீடுகளுக்கு உட்படுத்தியுள்ளதாகவும், அந் நிதியாண்டில் தனது திணைக்களத்துக்கு செய்ய முடியுமான ஆற்றல் உண்டெனவும், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் விஷேடமாக பொறுப்பேற்க வேண்டும் எனினும் 1203 மற்றும் 1404 ஆம் செலவு விடயங்கள் இரண்டுக்கும் கணிப்பீட்டாண்டின் வருடாந்த மதிப்பீடம்டிலிருந்து ரூ 1,650,000 ஒதுக்கப்பட்டிருந்த | நிதி ஒழுங்குவிதிகளின் குறிப்பு 50 (I) இன் படி பணியாற்ற வேண்டும். | இச் செலவு விடயத்தின் செலவுக் கட்டுப்பாடு மற்றும் தேவை எழாத காரணத்தினால் செலவு விடயம் மீதி நிதிப் பிரமானக் குறிப்பு 66 இன் படி வேறு விடயங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது. |

போதும் அதில் ரூ. 860,500 இனை வேறு செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. அது மதிப்பீட்டு ஒதுக்கலின் நூற்றுக்கு 40 வீதம் முதல் நூற்றுக்கு 63 வீதம் வரை வித்தியாசம் பரவியிருந்தது.

**2.2 வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்**

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) நீர்ப்பாசன மற்றும் நீரியல்வள முகாமைத்துவ அமைச்சினால் (செலவுத் தலைப்பு 198) கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூ. 3,959,512 ஏற்பாட்டிலிருந்து ரூ. 1,632,126 அதாவது நூற்றுக்கு 41 வீதம் மீதியாக இருந்தது. | பெற்றுத்தரும் ஒதுக்கங்களை பயன்படுத்தவதற்கு செயற்பாட்டு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். | வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் பெற்றுத்தரப்படும் ஒதுக்கங்களை விடுவிக்கும் பணிகளை மாத்திரமே நாம் மேற்கொள்வதுடன், அவற்றின் மிகுதிகள் காணப்படுவது எமது நிர்வாகத்துக்கு அப்பாற்பட்ட செயலாகும். |
| (ஆ) மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சின் (செலவுத் தலைப்பு 151) இன் கீழ் ஒதுக்கித் தரப்பட்ட ரூ. 68,382,159 ஆன ஏற்பாட்டிலிருந்து ரூ. 28,741,852 அதாவது நூற்றுக்கு 42 வீதம் மீதியாக இருந்தது. | பெற்றுத்தரப்படும் ஏற்பாடுகளை பயன்படுத்துவதற்கு செயற்பாட்டு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் அபிவிருத்தி யோசனைகளுக்கான ஏற்பாடு மற்றும் முற்பணம் 2018 ஆம் ஆண்டின் டிசம்பர் ஆரம்பப் பகுதியிலேயே இவ் அலுவலகத்துக்கு கிடைக்கப்பெற்றது. அதன்படி கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட பிரதேச செயலாளர் அலுவலகத்துக்கு குறித்த ஏற்பாட்டு பணம்/முற்பணம் விடுவிக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது எனினும் அக்கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு தேவையான ஏற்பாட்டு செயல்முறைகளையும் ஏனைய நடைமுறைகளையும் பின்பற்ற போதுமான கால அவகாசம் இருக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 உள்நாட்டு நிதிகளிலிருந்து செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் அமைச்சின் செயலாளரினால் 2018 ஜனவரி 30ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட MDA/01/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3ஆம் பந்திக்கு அமைய செலவுத் தலைப்பு 104-02-06-06-2506 கிராமப் பாடசாலைகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ் சுகாதார வசதிகள் மற்றும் மின் இணைப்பை பெற்றுக்கொடுத்தல், ஆகிய விடயங்கள் தொடர்பிலான கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டி இருந்தபோது, கந்தளாய் பிரதேச செயலகப் பிரிவின் அல்-ஷபா, அல்-தாரிக் கனிஷ்ட, அல்- நஜா அரபுக் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு 03 போட்டோ பிரதி இயந்திரங்களை பெற்றுக்கொடுப்பதற்கு ரூ 390,000 செலுத்தப்பட்டிருந்தது. | அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்படும் போது குறித்த சுற்று நிருபத்தின் பரிந்துரைகளுக்கு அமையவும் அடிப்படை மனித தேவைக்கு முதலிடம் வழங்கப்பட வேண்டும் | பின்னடைந்த பிராந்தியங்களை அபிவிருத்தி செய்யும் (2018) கருத்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டச் செயலாளரின் GAT/PLA/RRDP/D0. 05/17 ஆம் இலக்கமுடைய 2018.08.21 ஆம் திகதிய கடிதம் மூலமாக ஒப்புதல் பெற்று எமக்கு அனுப்பப்பட்ட கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லாஹ் மஹ்ரூப் அவர்களின் அபிவிருத்தி யோசனைகள் (11) க்கு அமைய திருகாணமலை மாவட்டத்தின் GAT/ACC-2/ALLY/104/AMA/02/2018 மற்றும் 2018.08.31 ஆம் திகதிய ஏற்பாடுகளை விடுவிக்கும் கடிதத்துடன் தொடர்புடையது. அதன்படி அல் நஜா அரபுக் கல்லூரி, அஸ்ஸபா வித்தியாலயம், மற்றும் அல் தாரிக் ஆரம்பப் பாடசாலை ஆகியவற்றுக்கு போட்டோ பிரதி இயந்திரங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்ட தென்ற அபிவிருத்தி கருத்திட்டம் மூன்று (03) க்கான பயன்பாட்டச் செயல்முறையைப் பின்பற்றி எமது அலுவலகத்தால் செயற்படுத்தப்பட்ட தென பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டது. |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பயன்படுத்தப்பட்டதன் பின் கிடைக்கப் பெற்ற 06 வாகனங்கள் அப்பறப்படுத்தப்படாமல் 2016 ஆம் ஆண்டில் இருந்து | பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்ட வாகனம் சம்பந்தமாக 2015 ஜூலை 10ஆம் திகதி அரசாங்க சுற்றறிக்கை இலக்கம் 02/2015 | 2019ஆம் ஆண்டின் 03 ஆம் காலாண்டுக்கு பின் அப்புறப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தின் அருகில் இயற்கை அழிவுகளால் பாதிக்கப்படும் வகையில் நிறுத்தப்பட்டுள்ளது. | மற்றும் 2018 மார்ச் 19ஆம் திகதி சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 01/2018 இன் படி அப்புறப்படுத்துவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |

**3.3 முகாமைத்துவ பலவீனங்கள்**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மாவட்ட செயலகத்துக்குரிய உட்துறைமுக பாதையில் அமைந்துள்ள இலக்கம் 1B மற்றும் 3B அரசாங்க இல்லங்களில் குடியிருப்போர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூ 387,800 நிலுவை வீட்டு வாடகை அறவிடுவதற்குரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவையில் உள்ள வீட்டு வாடகையை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒரு உத்தியோகத்தர் அதாவது மொத்த நிலுவைகளையும் 2019.07.10 ஆம் திகதி செலுத்தியுள்ளார்.<br><br>மற்றுமொரு உத்தியோகத்தர் செலுத்த வேண்டிய ரூ. 39,375 நிலுவையை செலுத்துமாறு திணைக்களத் தலைவர் ஊடாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) மாவட்ட செயலகத்திலும் பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் 5 வருடங்களுக்கு மேல் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக இடமாற்றம் செய்யும் கொள்ளை செயற்படுத்தப்படவில்லை. | 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல 18/2001 இன் பிரகாரம் கடமையாற்ற வேண்டும். | 5 வருடங்களை விட கூடிய ஒன்றிணைந்த சேவை உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக உள்ளக இடமாற்றம் மற்றும் வருடாந்த இடமாற்றங்கள் மூலம் இடமாற்றப்படுவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. சில இடமாற்றங்கள் இடம்பெற்ற போதிலும் நிலவும் அதிக வெற்றிடங்கள் காரணமாக சில உத்தியோகத்தர்களை 05 வருடங்களை விட மேலதிகமான காலம் வைத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. |
| (இ) 2015 நவம்பர் முதல் 2018 ஜனவரி வரையான காலப்பகுதியில் பிரதேச செயலாளர் அலுவலகப் பிரிவில் ஓய்வுபெற்ற மூவருக்கு | மேலதிகமாக செலுத்தப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவு மீளப்பெறுவதற்கு செயற்பட வேண்டும். | இவ் ஓய்வு பெற்ற மூவருக்கும் மேலதிகமாக செலுத்தப்பட்ட பணம் ஓய்வூதியக் திணைக்களத்தால் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

| | | |
|---|---|---|
| மேலதிகமாக செலுத்தப்பட்டதாக இனங்காணப்பட்ட ரூ. 495,978 மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| (ஈ) 2002 முதல் 2014 வரையான காலப்பகுதியில் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்குறிய 09 வாகனங்களுக்கு ஏற்பட்டிருந்த விபத்துச் சேதங்களின் பெறுமதி ரூ.4,699,905 ஆக கணக்கிடப்பட்டிருந்த போதிலும் குறித்த பரிசொதனை நடவடிக்கைகளின் தாமதம் காரணமாக மீள் அறவீட்டுச் செயற்பாடுகள் நடைபெறவில்லை. | வாகன விகத்து சம்பந்தமாக நிதிப் பிரமானங்கள் 104(3) மற்றும் 104(4) பிரகாரம் செயற்பட வேண்டும். | குறித்த விபத்துக்களில் சில 20 வருடங்களை விட பழையவை என்பதுடன் அவை தொடர்பான எதிர்கால நடவடிக்கைகளின் நிமித்தம் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. மேலும் 06 விபத்துக்கள் தொடர்பான கோவைகள் முடிக்கப்பட வேண்டியுள்ளது. ஏனைய கோவைகளின் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. 2019 மூன்றாம் காலாண்டு முடிவடைவதற்கு முன் எல்லா வேலைகளும் முடிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

## 4. நிலைபேறான இலக்குகள் அடையப்பட்டிருக்காமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறுடைய இலக்குகள் பற்றி உத்தியோகத்தர்களுக்கு போதுமான அளவு தெளிவுபடுத்தப் பட்டிருக்கவில்லை. என்பதுடன், நிலைபேறுடைய இலக்குகள் சரியாக இனங்காணப்படாமையால் கணிப்பீட்டாண்டில் இலக்குகளை அடைந்தமை பற்றிய மதிப்பீடுகளை மேற்கொள்ள முடியவில்லை. | நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு செயற்படுத்தல் நடைபெற வேண்டும். | உள்ளக நிர்வாக குழுமத்தை சரியான முறையில் ஒழுங்குபடுத்தி உத்தியோகத்தர்களுக்கு இயன்றளவு பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு வளங்களை பூரணமாக பயன்படுத்துதல் மற்றும் சிறந்த வளமுகாமைத்துவ பயிற்சியும் பொது நிர்வாகத்தில் காணப்படும் சட்ட வரையறைக்குள் வெளிப்படைத்தன்மையுடன் கடமையாற்றத் தேவையான சூழலை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். அதனூடாக நிலைபேறுடைய இலக்குகளை நெருங்குவதற்கு தேவையான பின்னணி உருவாக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துகிறேன். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிறைவேற்று அலுவலர் மட்டத்தின் பதவிவெற்றிடங்கள் 15 உம் மூன்றாம் மட்டத்துக்குரிய உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்கள் 20உம் இடைநிலை மட்டத்துக்குரிய 163 பதவி வெற்றிடங்களும் ஆரம்ப மட்ட உத்தியொகத்தர்கள் பதவி வெற்றிடங்கள் 31உம் என்றவாறு 229 பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தேவையான பதவி வெற்றிடங்களை நிரப்பவதற்கு உடன் கவனம் செலுத்துக. | புதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு கவனம் செலுத்துமாறு பொது நிர்வாக அமைச்சுக்கு அறிவித்தல் கொக்பட்டுள்ளது என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். |